


# MAS GALLERY

MAS

Monetary Authority
of Singapore




# எங்களைப் பற்றி

## MAS காட்சிக்கூடம் (MAS)

**சிங்கப்பூர் நாணய வாரியம் (MAS) சிங்கப்பூரின் மத்திய வங்கியும், ஒருங்கிணைந்த நிதிக் கட்டுப்பாட்டு அமைப்பும் ஆகும். மேலும், சிங்கப்பூரை ஒரு ஆற்றல்மிக்க அனைத்துலக நிதி மையமாக மேம்படுத்த MAS நிதித் துறையுடன் பணியாற்றுகிறது.**

சிங்கப்பூர் நாணயத்தின் வரலாற்றை அறிவதுடன், MAS எவ்வாறு தொடர் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாக சிங்கப்பூரை ஒரு முன்னணி அனைத்துலக நிதி மையமாக்க ஒரு திடமான, வலுவான நிதித்துறையை எவ்வாறு ஊக்குவிக்கிறது என்பதையும் கண்டறியவும்.

ஒரு நிலையான எதிர்காலத்தையும் பசுமையான உலகையும் மீண்டும் உருவாக்க MAS எவ்வாறு நிதித்துறையுடன் இணைந்து பணியாற்றுகிறது என்பதை அறியவும். தொழில்நுட்ப மாறுதல்களால் வளர்ந்து வரும் உலகில், வருங்கால நிதிக் கட்டமைப்பை மாற்றுவதில் MAS எப்படி ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது என்பதை கண்டறியுங்கள். இறுதியாக, சிங்கப்பூரின் நிதித்துறையை முன்னேற்றிச் செல்ல நீங்கள் எப்படி MAS-உடன் இணைந்து பணியாற்றலாம் என்பதையும் கண்டறியவும்.

சிங்கப்பூரின் பொருளாதாரம் மற்றும் நிதித்துறையில் MAS ஆற்றும் பல்வேறு பங்குகளைப் பற்றி அறிந்துகொள்ள இரு வழித் தொடர்பு கண்காட்சிகளின் மூலம் ஓர் அனுபவப் பயணத்தை மேற்கொள்ளவும்.

# MAS காட்சிக்கூட விவரத்திரட்டு

MAS கட்டிடத்தில் இரு தளங்களில் இடம்பெற்றுள்ள காட்சிக்கூடமானது ஆறு வெவ்வேறு பகுதிகளைக் கொண்டுள்ளது. இங்குள்ள பல்வேறு பல்லூடகக் காட்சிப்பொருட்கள் மூலம், இந்த காட்சிக்கூடம் அளிக்கும் ஆழ்ந்த அனுபவத்தால் மகிழுங்கள்.

ஒலி வழிகாட்டியை அணுகிட காட்சிப்பொருட்களில் உள்ள QR குறியீட்டை வருடவும்.




## 2F

**பகுதி D**
A Leading International Financial Centre
ஒரு முன்னணி அனைத்துலக நிதி மையம்

**பகுதி E**
The Future of Finance
நிதித்துறையின் எதிர்காலம்

**பகுதி F**
Be a Change Maker
மாற்றம் அளிப்பவராக இருத்தல்

**Reflections**

## 1F

**பகுதி A**
Our Currency Journey
நம் நாணய பயணம்

**பகுதி B**
Sustained Non-Inflationary Economic Growth
நிலையான பணவீக்கமற்ற பொருளாதார வளர்ச்சி

**பகுதி C**
A Robust and Sound Financial System
ஒரு வலுவான, ஆரோக்கியமான நிதியமைப்பு

## பகுதி A

# நம் நாணய பயணம்

ஒரு நாட்டின் நாணயத்தில் உள்ள வடிவங்கள் அதன் வரலாறு, கலாச்சாரம், மற்றும் லட்சியங்களைக் காட்டும் சாளரங்கள் ஆகும். இப்பகுதியில், 1800களிலிருந்து இன்று வரையிலான சிங்கப்பூர் நாணயத்தின் பாதையையும், அது எவ்வாறு சிங்கப்பூரின் வளர்ச்சி, இடர்ப்பாடுகள் மற்றும் வெற்றிகளை பிரதிபலிக்கிறது என்பதையும் அறியவும்.

### 1 கண்டறியப்பட்ட ஆண்டுகள்

சிங்கப்பூரில் புழக்கத்தில் இருந்த வெவ்வேறு நாணயங்கள் எவ்வாறு நமது தேச வளர்ச்சி செயல்முறை மற்றும் அரசுரிமை உருவகப்படுத்துகின்றன என்பதைக் கண்டறியவும்.

### 2 சுதந்தரத்திற்குப் பிந்தைய நாணயங்கள்

சுதந்தரத்திற்குப் பின் சிங்கப்பூரின் வளர்ச்சியை பிரதிநிதிக்கும் இந்த நோட்டுகளில், தலைசிறந்த சிங்கப்பூர் கருப்பொருட்களும் குறிப்பிடத்தக்க சாதனைகளும் இடம்பெற்றுள்ளன.




### 3 நீரிணை ஜலசந்தி குடியிருப்பு வெள்ளிகள்

1899ல் வெளியிடப்பட்ட நீரிணை குடியிருப்பு வெள்ளிகள் எவ்வாறு மலேயாவின் பிரதான வர்த்தக வெள்ளியாகி, பொருளாதார நிலைத்தன்மையை அளித்தது என்பதைக் கண்டறியுங்கள்.

### 4 இறுதிகால மகாராணி உருவப்படங்கள்

பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலையடையும் முன்பும் பின்பும் மலேயாவின் நாணய வடிவங்கள் எவ்வாறு மாற்றம் பெற்றன என்பதை அறியவும்.

### 5 சிறப்பு நினைவு நாணயங்கள்

குறிப்பிடத்தக்க நிகழ்வுகளையும் சாதனைகளையும் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட நினைவு நாணயங்களைக் காணவும்.

# பகுதி B

# நிலையான பணவீக்கமற்ற பொருளாதார வளர்ச்சி

சிங்கப்பூரின் பணவியல் கொள்கை குறைவான மற்றும் நிலையான பணவீக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பணமாற்று விகிதத்தை மையமாகக் கொண்டுள்ளது. சிங்கப்பூர் வெள்ளியின் வாங்கும் திறனை நிலைப்படுத்தி, தொழில்கள் முதலீடு செய்வதற்கான தக்க சூழ்நிலையை உருவாக்கும் விதமாக ஒரு நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான வலுவான அடித்தளத்தை MAS எவ்வாறு அமைக்கிறது என அறியுங்கள்.

## 1 ஒரு முற்றிலும் திறந்த பொருளாதாரம்

ஒரு உத்திபூர்வமான இடத்தில் அமைந்த, இயற்கை வளங்களற்ற தீவு நாடான சிங்கப்பூரின் பொருளாதார வளர்ச்சிக்கு, வர்த்தகம் முக்கியமானது. ஒரு இருவழித் தொடர்பு நகரக்காட்சி மூலமாக, சிங்கப்பூரின் தனித்துவமான வர்த்தகரீதியான பொருளாதாரத் தொகுப்பைப் பற்றி அறியுங்கள்.

## 2 நிலையான பொருளாதார வளர்ச்சி

இருவழித் தொடர்பு காலவரிசையுடன் மகிழ்ந்து, 1960 களிலிருந்து இன்று வரை சிங்கப்பூரின் பொருளாதார மாறுதல்களை ஆராயுங்கள்.

## 3 குறைவான மற்றும் நிலையான பணவீக்கம்

"காலப் பயணி" (The Time Traveller) விளையாட்டின் மூலம் 1960களிலிருந்து ஊதியங்கள், விலைகள் மற்றும் வாழ்க்கைத்தரம் எவ்வாறு மாறியுள்ளன என்பதை அறியுங்கள்; மேலும் "தனிநபர் பணவீக்க அனுபவம்" (Personal Inflation Experience) விளையாட்டின் மூலம் உங்கள் வீட்டின் பணவீக்க விகிதம் எவ்வாறு ஒரு பொதுவான சிங்கப்பூர் குடும்பத்துடன் மாறுபடுகிறது என்பதைக் காணுங்கள்.

## 4 பணமாற்று விகிதத்தை மையப்படுத்திய பணவியல் கொள்கை கட்டமைப்பு

MAS எவ்வாறு பணமாற்று விகிதத்தை கையாண்டு நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற விலைவாசி நிலைத்தன்மையை அடைகிறது என்பதைக் கண்டறியுங்கள்.

## 5 BBC கட்டமைப்பு

"பணவியல் கொள்கை" (Monetary Policy Game) விளையாட்டின் மூலம் MAS எவ்வாறு மாறிவரும் பொருளாதார நிலைகளில் விலைவாசி நிலைத்தன்மையைத் தொடர்ந்திட "Basket, Band and Crawl" (BBC) கட்டமைப்பை பயன்படுத்துகிறது என்பதை கண்டறியுங்கள்.

## 6 பணமாற்று விகிதம் எவ்வாறு பணவீக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

இரு பிரதான வழிகளால் MAS எப்படி பணவீக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை கண்டறியுங்கள்.



## பகுதி C

# ஒரு வலுவான, ஆரோக்கியமான நிதியமைப்பு

சிங்கப்பூரின் பொருளாதாரம், நாணயம் மற்றும் நிதியமைப்பு ஆகியவை உலகளாவிய நிகழ்வுகள் மற்றும் உள்நாட்டு நிலைகளால் தாக்கம் அடைகின்றன. ஒரு ஒருங்கிணைந்த மேற்பார்வையாளராகவும், மத்திய வங்கியாகவும் MASன் பங்கை அறிவதுடன், அது எவ்வாறு நிதிநிலை நிலைத்தன்மையையும் ஒரு வலுவான நிதியமைப்பையும் மேம்படுத்துகிறது என்பதையும் அறியவும்.

### 1 நிதிநிலைப் புயல்களை கையாளுதல்

"நெருக்கடி அறை" (Crisis Room) ஆவணப்படத்தைக் கண்டு, அரசு நிறுவனங்கள், நிதித் தொழில் மற்றும் தனிநபர்களின் கூட்டு முயற்சிகளின் மூலம் பல்வேறு நெருக்கடிகளுக்குப் பின்னும் சிங்கப்பூர் எவ்வாறு மீள்திறன் கொண்டும், மேன்மேலும் வலுப்பெற்றும் வருகிறது என்பதைக் கண்டறியுங்கள்.

### 2 அதிகாரப்பூர்வ வெளிநாட்டு இருப்புகளை (OFR) கையாளுதல்

MAS-ஆல் நிர்வகிக்கப்படும் OFR எப்படி சிங்கப்பூரின் நாணயக் கொள்கை கட்டமைப்பு மேலுள்ள நம்பிக்கையை நிலைப்படுத்தி, பெரும் பொருளாதார நிலைத்தன்மையை பாதுகாக்கிறது என்பதை அறியுங்கள்.

### 3 சிங்கப்பூர் வெள்ளியின் நம்பகத்தன்மையை பாதுகாத்தல்

MAS எவ்வாறு உள் மற்றும் வெளிநாட்டு நிலவரங்களை உற்றுநோக்கி சிங்கப்பூர் வெள்ளி (SGD) மற்றும் OFR-இன் பாதையை மதிப்பிட்டு, நாணயத்தை எப்படி நிலையாக வைத்திருக்கிறது என்பதை இந்த விளையாட்டின் மூலம் அறிந்திடுங்கள். நாணய சோதனை மையத்தில் புற ஊதா மற்றும் பின்னொளியில் போலி நாணயங்களின் அபாயத்தைக் குறைக்க உதவும் பாதுகாப்பு அம்சங்களை அறிந்திடுங்கள்.

### 4 நிதித்துறையை கண்காணித்து ஒழுங்குபடுத்தல்

சிங்கப்பூரின் நிதி சந்தைகளின் மீதுள்ள நம்பிக்கையை நிலைப்படுத்த முக்கியமான நிதியமைப்பின் நேர்மைத்தன்மையை பாதுக்காக்க MASன் ஒழுங்குபடுத்தலையும் கண்காணிப்பையும் பற்றி அறியுங்கள்.

### 5 கண்காணிப்பையும் ஒழுங்குமுறை இணக்கத்தையும் பலப்படுத்தும் தொழில்நுட்பம்

கணிப்பு சார்ந்த இரு வழித்தொடர்பு அட்டவணையில் ஏழு காட்சிகளுடன் சோதனைகள் செய்து, கண்காணிப்பையும் ஒழுங்குமுறை இணக்கத்தையும் தொழில்நுட்பம் எவ்வாறு மேலும் திறமையாகவும், கணிப்புடனும், பயனுள்ளதாகவும் ஆக்குகிறது என்பதை புரிந்திடுங்கள்.

### 6 நிதி நிலைத்தன்மை

ஒரு கை சைகை விளையாட்டு மூலம் நிதி பாதிப்புகளைப் பற்றி அறியுங்கள். MAS எவ்வாறு அவற்றைக் கையாண்டு, நிதியியல் அதிர்ச்சிகள் மற்றும் இடையூறுகளிலிருந்து சிங்கப்பூரின் நிதியமைப்பு மீள்தன்மை பெறுவதை உறுதிசெய்கிறது என்பதை கண்டறியுங்கள்.






## பகுதி D

# ஒரு முன்னணி அனைத்துலக நிதி மையம்

சிங்கப்பூர் உலகின் உயரிய நிதி மையங்களில் ஒன்றும், ஆசியாவின் அதிவேக வளர்ச்சி கொண்ட பொருளாதாரங்கள் மற்றும் சந்தைகளுக்கு நுழைவாயிலும் ஆகும். ஒரு உலகளாவிய நிதி மையத்தை எப்படி வளர்ப்பது என்பதையும், MAS எவ்வாறு ஒரு பசுமையான மற்றும் நிலையான நிதியமைப்புக்கு எவ்வாறு பரிந்துரைக்கிறது என்பதையும் அறியுங்கள்.

### 1 நிதி நிறுவனங்களின் ஒரு துடிப்பான சுற்றுச்குழல் அமைப்பு

சிங்கப்பூரில் உள்ள 2,000த்திற்கும் அதிகமான நிதி நிறுவனங்களின் துடிப்பான சுற்றுச்சூழல் அமைப்பு ஆசிய-பசிபிக் பகுதியில் உள்ள வேகமாக வளர்ந்து வரும் சந்தைகளுக்கு சேவை புரிகிறது. ஒரு சைகை சார்ந்த திரையின் மூலம், நமது நிதித்துறை 1970 களிலிருந்து எவ்வாறு நம் பொருளாதார வளர்ச்சிக்கு ஆணிவேராக அமைந்த ஒரு பலதரப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்பாக உருவாகியுள்ளது என்பதை காணுங்கள்.

### 2 வலுவான உலகளாவிய கூட்டமைப்புகள்

MAS மதிக்கத்தக்க பலதரப்பு மற்றும் இருதரப்பு கூட்டமைப்புகளை உருவாக்க ஒரு முன்னோக்கிய அணுகுமுறையைக் கையாள்கிறது. ஒரு இருவழித் தொடர்பு ஊடாடும் கூடம் மூலம் MASன் சர்வதேச ஈடுபாடுகள் படங்கள் மற்றும் வீடியோக்களை காணுங்கள்.

### 3 நிலையான எதிர்காலத்துக்கு பசுமையான நிதித்துறை

நிதித்துறையானது உலகின் பசுமையான, நிலையான எதிர்காலத்துக்கு வாயிலாக இருப்பதுடன், நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாகவும் அமைந்துள்ளது. ஆசியாவின் மத்தியில் அமைந்த அனைத்துலக நிதி மையமான சிங்கப்பூர், ஆசியாவிலும் உலகெங்கிலும் நிலையான முன்னேற்றத்தை உருவாக்க முக்கிய பங்காற்றுகிறது.

ஒரு சைகை சார்ந்த புத்தகத்தின் மூலம், MAS எப்படி ஒரு ஐந்து முனை கொள்கையைக் கொண்டு ஒரு நிலையான சிங்கப்பூரையும், கார்பன் அற்ற எதிர்காலத்துக்கு ஆசியாவின் பாதையையும் அமைக்க முயல்கிறது என்பதை அறியுங்கள். மனிதகுலத்துக்கு முக்கிய சவாலான பருவநிலை மாற்றம் குறித்த "ஒரே பூமி" (Only One Earth) என்ற உணர்ச்சிமிக்க காணொளியை கண்டு மகிழுங்கள். நிதித்துறை எப்படி ஒரு சிறந்த மற்றும் பசுமையான எதிர்காலத்துக்கு நம்பிக்கை அளிக்கிறது என உணருங்கள்.



## பகுதி E

# நிதித்துறையின் எதிர்காலம்

நிதித்துறை, தொழில்நுட்பம், மற்றும் நிதி தொழில்நுட்பம் ஆகியவை சிங்கப்பூரின் எதிர்கால நிதி நிலையை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. கட்டச்சங்கிலி என்ற தரவுத்தளம் கட்டமைப்பு தொழில்நுட்பம், மின்னணு பணப்பரிமாற்றங்கள் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தரவு பகுப்பாய்வு வரை எப்படி தொழில்நுட்ப புதுமைகள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, மாறக்கூடிய பொருளாதாரத்தை கட்டமைத்து, ஒரு உள்ளடக்கிய சமுதாயத்தை மேம்படுத்துகின்றன என்பதை கண்டறியுங்கள்.

### 1 ஒரு பிணைந்த உலகம் - வங்கிகள், சொத்து மேலாண்மை மற்றும் காப்பீட்டின் எதிர்காலம்

தொழில்நுட்பமும், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு பகுப்பாய்வின் பயன்பாடும் வங்கிகள், சொத்து மேலாண்மை மற்றும் காப்பீட்டு துறைகளில் நம் அனுபவத்தை மாற்றியமைக்கின்றன. புதுமைகளும் வாடிக்கையாளர் மையப்படுத்தலும் முன்னுக்கு தள்ளப்படுகின்றன.

### 2 பிளாக்செயின் திருப்புமுனை

ஒரு பலநபர் விளையாட்டின் மூலம் பிளாக்செயின் தொழில்நுட்பம் பற்றி அறிந்துகொள்ளுங்கள். பல்வேறு பயன்பாடுகள் மூலம் பிளாக்செயின் எவ்வாறு நிதித்துறைக்கு உதவிபுரிந்து, மின்னிலக்க மாற்றத்தை முன்னெடுத்து செல்கிறது என்பதையும் அறியுங்கள்.

### 3 நாணய ஆய்வகம்

வசதி, போட்டி, மற்றும் புதுமைகள் நிறைந்த மின்னணு பணப்பரிமாற்ற சமுதாயத்தை உருவாக்குவதே MASன் நோக்கமாகும். ஒரு இருவழித் தொடர்புக் கூடம் மூலம், சிங்கப்பூரின் பணப்பரிமாற்ற பாதையை ஆராய்ந்து, ஆய்ந்து, வெவ்வேறு மின்னணு பணப்பரிமாற்ற முறைகள் எவ்வாறு வேலை செய்கின்றன என்பதை அறியுங்கள்.

### 4 பணப்பரிமாற்ற சுற்றுச்சூழல் அமைப்பு

ரொக்கம் பணம் மற்றும் காசோலைகளிலிருந்து கட்டண அட்டைகள் மற்றும் பணப் பரிமாற்றம் முதல் மின்னிலக்க டிஜிட்டல் கட்டண டோக்கன்கள் வரையிலான முழு பணப்பரிமாற்ற சுற்றுச்சூழல் அமைப்பைக் காணவும்.

### 5 தரவுகளின் பொறுப்பான பயன்பாடு

இன்று சேகரிக்கப்படும் பெரும் அளவிலான தரவுகள், நெறிமுறையான AI அமைப்புகள் மற்றும் செயல்முறைகளின் தேவையை அதிகரித்துள்ளன. இருவழித் தொடர்பு கூடங்கள் மூலம் MAS எப்படி நேர்மை, நெறிமுறை, பொறுப்பேற்றல் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை முன்னிறுத்தி, நிதி நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு பகுப்பாய்வை பயன்படுத்த வழிகாட்டுகிறது.






# பகுதி F
# மாற்றம் அளிப்பவராக இருத்தல்

ஒவ்வொரு தகவல் சார்ந்த நிதி முடிவும், நிதித்துறையில் உருவாகும் ஒவ்வொரு வேலைவாய்ப்பும் சிங்கப்பூரின் நிதித்துறையின் துடிப்புக்கு வழிவகுக்கின்றன. இப்பகுதியில், சிங்கப்பூரின் நிதித்துறையை முன்னெடுத்துச் செல்ல MAS உடன் நீங்கள் எப்படி இணைந்து பணியாற்றலாம் என்பதைக் கண்டறியுங்கள்.

## 1 உங்கள் நிதி எதிர்காலத்தின் பொறுப்பை கையிலெடுங்கள்

நிதி திட்டமிடலின் கட்டமைப்புகளை கண்டறியுங்கள்; கூட்டு வட்டி மற்றும் பல்வகைப்படுத்துதலின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்டு, உங்கள் நிதியைக் கையாள்வதில் உறுதியான அடித்தளங்களை உருவாக்குங்கள்.

## 2 நிதித்துறையில் வேலைவாய்ப்பு

ஒரு துடிப்பான நிதித்துறையில் நீங்கள் எப்படி பங்குபெறலாம் எனக் கண்டறியுங்கள். தனிநபர் விவரக் குறிப்பு வாழ்க்கைத் தொழில் விளையாட்டின் மூலம் நிதித்துறையில் உங்களுக்கு ஒத்த வேலைவாய்ப்புகளைக் கண்டறியுங்கள்.

## 3 நிதி சேவைகளுக்கான திறன் கட்டமைப்பு

நிதித்துறையில் உள்ள வல்லுநர்கள் அவர்களின் பணி மேம்பாட்டுக்கு தேவையான திறன்கள் குறித்து தகவல்சார்ந்த முடிவுகளை எடுக்க உதவும் நிதி சேவைகளுக்கான திறன் கட்டமைப்பு பற்றி அறியவும்.

## 4 மின்னிலக்க நிதி சேவைகளை பாதுகாத்தல்

நிதித்துறையின் மீதுள்ள நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் நிலைப்படுத்த ஒரு உறுதியான இணைய சைபர் மீள்தன்மை முக்கியமானது. சைபர் போர்வீரன் விளையாட்டின் (Cyber Warrior Game) மூலம் நிதித்துறையில் இணைய சைபர் மீள்தன்மையைக் கட்டமைக்க MASன் நான்கு முனை உத்தியைப் பற்றி அறிந்துகொண்டு, இணைய ஆபத்துகளிலிருந்து உங்கள் தனிநபர் உபகரணங்கள் மற்றும் தகவல்களை பாதுகாப்பது எப்படி எனக் கற்றுக்கொள்ளுங்கள்.



# உங்கள் வருகையை திட்டமிடுங்கள்

உங்கள் வருகை சுய வழிகாட்டல் முறையிலானது. பள்ளிக்கூட வருகைகள் மற்றும் 20க்கும் மேற்பட்ட நபர்கள் கொண்ட குழுக்களின் வருகைக்கு தயவுசெய்து எங்களுடன் முன்பதிவு செய்யுங்கள்.



## திறந்திருக்கும் நேரம்

| | |
|---|---|
| **திங்கள் - வெள்ளி** | காலை 9.30 - மாலை 5.30 |
| **சனி** | காலை 9.30 - பிற்பகல் 1.30 (குழு முன்பதிவுகளுக்கு மட்டும்) |

**ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் மூடப்படும்.**

நுழைவுக் கட்டணம் இல்லை.

காட்சிக்கூடம் குறித்த விசாரணைகளுக்கு:

**தொலைபேசி** (65)-6225-5577
**மின்னஞ்சல்** webmaster@mas.gov.sg

**பின்னூட்டம்** **குழு முன்பதிவு**

## இங்கு வருவதற்கு

10 Shenton Way, MAS Building
Singapore 079117




**அருகிலுள்ள ரயில் நிலையம்**
Tanjong Pagar MRT Station

**பேருந்து சேவைகள்**

| | |
|---|---|
| Anson Road (தஞ்சோங் பகார் நிலையம் வெளிவாயில் C) | 57, 131, 167, 186, 400, 970 |
| Shenton Way (AXA கோபுரத்துக்கு எதிரில்) | 10, 57, 97, 100, 131, 502 |
| Shenton Way (MAS கட்டடத்துக்கு எதிரில்) | 70, 75, 106, 107, 130, 133, 162, 167, 186, 196, 400, 970 |